**DEPOSITION OF WITNESS**
**(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)**
IN THE COURT OF THE III ADDL. DIST. & SESSIONS COURT(PCR), MADURAI.
Spl. S.C. No. 31/19

நாள்: 06.07.2019 விசாரணை தொடங்கிய நேரம் : 4.15 மணி

**(அரசு தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட மனு எண் 590/19 அனுமதிக்கப்பட்டதின் பேரில் சாட்சி திரும்ப அழைக்கப்பட்டு அரசுதரப்பில் மறு விசாரணை):**

<u>அ.சா - 4 சுவாதி ( அரசு தரப்பில் மறு குறுக்கு விசாரணை):</u>

என் அப்பா பெயர் ஆர். பெரியசாமி. நான் என் அப்பா, அம்மாவுடன் வசித்த விலாசம் 4/169, ராமநாதபுரம், நடந்தை அஞ்சல், பி, வேலூர், நாமக்கல் மாவட்டம். நான் கல்லூரி படிப்பு முடிக்கும் போது எனக்கு வயது 21 என்றால் சரிதான். பொறியியல் கல்லூரியில் நான் படித்த முக்கிய படிப்பு எலக்ட்ரானிக்ஸ் அன்ட் கம்யூனிகேசன். என் அப்பாவுக்கு சொந்தமான நிலம் சுமார் 5 ஏக்கர் உள்ளது என்றால் சரிதான். எங்கள் குடும்பத்தில் நான் தான் முதல் பட்டதாரி என்றால் சரிதான். எங்கள் ஊருக்கும் KSR பொறியியல் கல்லூரிக்கும் இடையே 25 அல்லது 26 கிலோ மீட்டர் தூரம் இருக்கும். நான் படித்த சமயத்தில் அந்த கல்லூரியின் முதல்வர் பெயர் ஞாபகமில்லை. நான் படித்த விவரங்களை ஒருமுறை பார்த்தால் என்னால் ஞாபகப்படுத்திக்கொள்ளமுடியும். என்னிடம் காண்பிக்கப்படும் ஏர்செல் சிம் கார்டு மனு நகல் ஆவணத்தில் உள்ள போட்டோ என்னுடையதுதான். அந்த போட்டோ அதசா ஆ 230 ( எதிரிகள் தரப்பு வழக்கறிஞரின் ஆட்சேபணையின் பேரில் குறிக்கப்பட்டது.)

அந்த ஆவணத்தில் என்னிடம் காட்டப்படும் கையெழுத்து என்னுடையது அல்ல. என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் 8508012978 என்ற எண் இருக்கிறதா என்றால் இருக்கிறது. அந்த ஆவணத்தில் சுவாதி த/பெ. பெரியசாமி என்றும் பிறந்ததேதி 30.5.1994 என்றும் இருக்கிறதா என்றால் இருக்கிறது. பிறந்ததேதிக்கு கீழே 9566949781 என்ற எண் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் குறிப்பிடப்பட்டுள்ளது. அதன் கீழே 4/169, ராமநாதபுரம், நடந்தை அஞ்சல், பரமத்திவேலூர், டி.கே. நாமக்கல் என்று குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலே குறிப்பிட்ட முகவரி மற்றும் மேலே குறிப்பிட்ட கைபேசி எண்கள் என்னுடையது அல்ல என்று மறுக்கமுடியாது என்றால் மேற்கண்ட கைபேசி எண்களை நான் பயன்படுத்தியது இல்லை. என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் உள்ள முகவரி மற்ற விவரங்களை கைபேசி இணைப்பு பெற நான் கொடுத்தேன் என்றாலும் தற்போது அந்த விவரங்களை ஒத்துக்கொண்டால்

உள்ளாட்சித்தகவல்
www.ullatchithagaval.com

ஏற்கனவே நான் வழக்கில் பொய் சொன்னது தெரிந்துவிடும் என்றாலும் சரியல்ல. நான் இவ்வாறு கைபேசி இணைப்பு பெறவில்லை. நான் நாமக்கல் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் ஒரு வாக்குமூலம் கொடுத்துவிட்டு நாமக்கல் முதன்மை மாவட்ட நீதிமன்றத்தில் மாற்றி சாட்சி சொன்னதால் பொய் சாட்சி சொன்னதாக என் மீது நாமக்கல் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் ஒரு வழக்கு நடக்கிறது என்றால் நான் பொய் சாட்சி சொல்லவில்லை.

நான் நாமக்கல் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்திற்கு Perjury வழக்கிற்கு ஆஜராகிறேன் என்றால் நாமக்கல் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் ஆஜராகிறேன். (இந்த கேள்வி எதிரிகள் தரப்பு வழக்கறிஞரின் ஆட்சேபணையுடன் பதிவு செய்யப்பட்டது.)

நான் நாமக்கல் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் ஒரு வாக்குமூலம் கொடுத்ததை எந்த சூழ்நிலையில் கொடுத்தேன் என்று இதுவரை யாரிடமும் எதுவும் சொல்லவில்லை என்றால் சரியல்ல.

<u>1 முதல் 15 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u> : இல்லை

**விசாரணை நிறுத்தப்பட்ட நேரம் : 4.50 மணி**

UTL
MEDIA
உள்ளாட்சித்தகவல்
www.ullatchithagaval.com

**DEPOSITION OF WITNESS**
**(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)**
IN THE COURT OF THE III ADDL. DIST. & SESSIONS COURT(PCR), MADURAI.
Spl. S.C. No. 31/19

நாள்: 06.07.2019 விசாரணை தொடங்கிய நேரம் : 4.50 மணி

**(அரசு தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட மனு எண் 590/19 அனுமதிக்கப்பட்டதின் பேரில் சாட்சி திரும்ப அழைக்கப்பட்டு அரசுதரப்பில் மறு விசாரணை):**

**அ.சா - 5 செல்வி (அரசு தரப்பில் மறு குறுக்குவிசாரணை) :**

நான் ரேஷனில் பொருட்கள் வாங்குகிறேன். தேர்தலில் ஓட்டு போட்டுள்ளேன். என்னிடம் காட்டப்படும் வாக்காளர் அடையாள அட்டையில் உள்ள போட்டோ என்னுடையதுதானா என்றால் சரியாக தெரியவில்லை. என்னிடம் காட்டப்படும் வாக்காளர் அடையாள அட்டையில் உள்ள போட்டோ என்னுடையது அல்ல. என்னுடைய கணவர் பெயர் பெரியசாமி. என்னுடைய முகவரி ராமநாதபுரம் நடந்தை, பரமத்தி வேலூர் தாலுகா, நாமக்கல் மாவட்டம். என்னிடம் காட்டப்படும் வாக்காளர் அடையாள அட்டையில் போட்டோவிற்கு மேலே உள்ள எண் TN/17/097/0249523 என்பது என் வாக்காளர் அடையாள அட்டை எண் என்றால் எனக்கு தெரியாது.

18.9.2018 ம் தேதி நாமக்கல் மாவட்ட நீதிமன்றத்தில் இந்த சாட்சியை விசாரணை செய்ததற்கான வாக்குமூலத்தை அரசு தரப்பு சிறப்பு வழக்கறிஞர் சாட்சியிடம் காட்டி அதில் உள்ள கையெழுத்துக்கள் உங்களுடையதா என்று கேட்டதற்கு சாட்சி அந்த கையெழுத்துக்கள் தன்னுடையதல்ல என்று மறுக்கிறார். நான் காவல் நிலையத்தில் வைத்து கையெழுத்து போட்டேன்.

நான் என்னுடைய வாக்காளர் அடையாள அட்டையின் நகல் கொடுத்து ஏர்டெல் சிம்கார்டு பெறுவதற்கு மனுவில் என் போட்டோ ஒட்டி, என் முகவரியுடன் நான் கையெழுத்து போட்டு கொடுத்தேன் என்றால் இல்லை. அந்த போட்டோ என்னுடைய போட்டோ மாதிரி தெரியவில்லை. எனக்கு தெரிந்து நான் சிம்கார்டு வாங்குவதற்கு மனு எதுவும் கொடுக்கவில்லை.

UTL MEDIA
உள்ளாட்சித்தகவல்
www.ullatchithagaval.com

என் மகள் சுவாதியுடன் படித்த கோகுல்ராஜ் என்பவர் தாழ்த்தப்பட்டோர் என்ற காரணத்தினால் கொலை செய்யப்பட்ட வழக்கில் எதிரிகள் என் சாதியை சார்ந்தவர்கள் என்பதால் அவர்களை வழக்கில் இருந்து காப்பாற்ற பொய்சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

<u>1 முதல் 15 **எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :**</u>

எனக்கு எழுத படிக்க தெரியாது.

(அரசு தரப்பில் வழக்கறிஞரின் ஆட்சேபணையுடன் மேற்கண்ட பதில் பதிவு செய்யப்பட்டது)

**விசாரணை நிறுத்தப்பட்ட நேரம் : 5.15 மணி**

UTL
MEDIA
உள்ளாட்சித்தகவல்
www.ullatchithagaval.com